## ரூ.76 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்! பல்வேறு அரசுத் துறைகள் சார்பில்

# வேலூரில் 4,844 பயனாளிகளுக்கு ரூ.129 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!



**வேலூர், டிச.9– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2024) வேலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் ரூ.75.95 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, வேலூர் மாவட்டத்தில் உள்ள 247 ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு பொருட்கள் அடங்கிய 345 விளையாட்டு உபகரண தொகுப்புகளையும், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ.72.61 கோடி மதிப்பில் 9 பள்ளிகளில் வகுப்பறை கட்டடங்கள், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வேலூர் நகரத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 250 படுக்கை வசதியுடன் கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு கட்டடம், கருவூல கட்டடம், சார்பதிவாளர் அலுவலகம் என 12 திட்டப் பணிகளுக்கும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.3.34 கோடி மதிப்பில் 1 எல்.பி.ஜி மயான பூமி, 2 பள்ளிகளில் வகுப்பறை கட்டடங்கள், 1 பல்நோக்கு கட்டடம், 1 பேருந்து பயணியர் நிழற்குடை உள்ளிட்ட 5 திட்டப் பணிகள் என மொத்தம் ரூபாய் 75.95 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.5.48 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 8 கட்டடங்களையும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட துறையின் சார்பில் ரூ.89 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 7 அங்கன்வாடி மையங்களையும், ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் ரூ.5.05 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், நியாய விலைக் கடை உள்ளிட்ட 16 முடிவுற்ற திட்டப் பணிகளையும், பொது சுகாதாரத் துறையின் சார்பில் ரூ.1.46 கோடி மதிப்பில் 4 சுகாதார நிலையங்களையும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் ரூ.1.40 கோடி மதிப்பில் டிராக்டர் பணிமனையையும் என மொத்தம் ரூ.14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 கட்டடங்களை இன்று திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 2,761 பயனாளிகளுக்கு ரூ.70 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 208 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி மதிப்பில் கலைஞர் கனவு இல்லம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டங்களின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத் துறையின் சார்பில் 440 பயனாளிகளுக்கு ரூ.38.26 கோடி மதிப்பில் கடன் உதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 602 பயனாளிகளுக்கு ரூ.7.40 கோடி மதிப்பில் கடன் உதவிகளையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 169 பயனாளிகளுக்கு ரூ.76.83 இலட்சம் மதிப்பில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் உள்ளிட்ட உபகரணங்களையும், சமூக நலத்துறையின் சார்பில் 250 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி வைப்பு தொகை உள்ளிட்ட நல திட்டங்களையும், சுகாதார துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு ரூ.21.60 இலட்சம் மானியத்தில் டிராக்டர், பவர் ட்ரில்லர் உள்ளிட்ட வேளாண் உபகரணங்களையும், மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பில் கறவை மாடுகளையும், வேளாண்மை துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.6.66 இலட்சம் மதிப்பில் சுழலும் கருவி, மண்புழு உரபடுக்கை உள்ளிட்ட வேளாண் கருவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.1.23 இலட்சம் மதிப்பில் சொட்டுநீர் பாசன கருவிகளையும், சிறுபான்மை நலத்துறையின் சார்பில் 107 பயனாளிகளுக்கு ரூ.0.79 இலட்சம் மதிப்பில் தையல் இயந்திரம் மற்றும் நலவாரிய அட்டைகளையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.12.63 இலட்சம் மதிப்பில் விவசாய மின் இணைப்பு ஆணைகளையும், தொழிலாளர் நலத் துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு ரூ.5.53 இலட்சம் மதிப்பில் தொழிலாளர்களுக்கு நிதியுதவியும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார் (அணைக்கட்டு), ப.கார்த்திகேயன் (வேலூர்), திருமதி அமுலுவிஜயன் (குடியாத்தம்), ஜே.எல்.ஈஸ்வரப்பன் (ஆற்காடு), அ.செ.வில்வநாதன் (ஆம்பூர்), வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி த.மாலதி மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## இந்தியாவிலேயே குறைந்த விலையில்

# மின்சாரம் வழங்குவது தமிழ்நாட்டில்தான்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேட்டி !

கரூர், டிச. 9 - இந்தியாவிலேயே குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவது தமிழ்நாட்டில் தான் என அமைச்சர் வி .செந்தில் பாலாஜி கூறினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி பொது மக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை வெறும் நிகழ்ச்சி நடைபெற்றது. கரூர் மாநகராட்சி கரூர் மேற்கு பகுதி தெற்கு பகுதி வார்டுகளில் பொதுமக்களிடம் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கோரிக்கை மனுக்களை பெற்றார். கரூர் கோடங்கிபட்டி பட்டாளம்மன் கோவில் அருகே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் குளித்தலை ஆர். மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, ஆர். இளங்கோ, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர் எஸ்.பி. கனகராஜ், கரூர் மாவட்ட எஸ்.பி. பெரோஸ்கான் அப்துல்லா, மாநகராட்சி ஆணையர் சுதா, முன்னிலை வகித்தனர். அமைச்சர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, தமிழ்நாடு அரசு மின்சார கொள்முதல் மத்திய மின் அமைப்புடன்தான் ஒப்பந்தம் போட்டது. எந்த தனியார் அமைப்புடனும் ஒப்பந்தம் போடவில்லை. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிர்வாக ரீதி யாகவும், நிதிநிலைமை ரீதியாகவு ம் முற்றிலும் சீர்குலைந் திருந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தை அடுத்தடுத்த நிர்வாகச் சீர்திருத்த மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கை மூலம், இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தைத் தலைநிமிர வைத்துள்ளவர் முதலமைச்சர் அவர்கள். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இப்படி அடிப்படை உண்மை கிஞ்சித்தும் இல்லாத பொய்க் குற்றச்சாட்டுகளை எதையாவது சொல்ல வேண்டும் விமர்சிக்க வேண்டும் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில் தொடர்ந்து பூதக்கண்ணாடி போட்டு அவதூறு பரப்பி வருகின்றனர். அவையெல்லாம் தோல்வி அடைந்து வருவதால் விரக்தியில் இது போன்ற மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி அறிக்கைகளை விடு கின்றனர். சரியான கருத்தாக இருந்தால் இந்த அரசு அதுபற்றி பரிசீலிக்கும் . அதில் எந்த மாற்றமும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க மின்சா ரத்தைப் பெறுவது குறித்த கட்டாய விதி எதுவும் இல்லாத காலகட்டத்தில் அதிமுக ஆட்சியில் அதானி லிமிடெட் நிறுவனம், தங்களுக்கு சொந்தமான ஐந்து நிறுவனங்கள் மூலமாக, 648 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தியை உற்பத்தி செய்வதற்கான எரிசக்தி கொள்முதல் ஒப்பந்தத்தில் 04/07/2015ல் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 என முடிவு செய்து, 31/03/2016க்கு முன் உற்பத்தி ஆலைகள் இயக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்படுகிறது . அதானி நிறுவனம் 31/03/2016க்கு முன் பல்வேறு தேதிகளில் 313 மெகாவாட் மின்சா ரத்தை இயக்கி, ஒப்பந்தப்படி ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 உரிமை கோரியது.. 31.03.2016 தேதிக்குப் பிறகு, அதாவது கிட்டத்தட்ட 6 மாதங்கள் கழித்து, 18.09.2016 அன்று 288 மெகாவாட் மின்சாரம் வழங்கியது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 2022ல், சிவில் மேல் முறையீட்டு முறையில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.. மின் சாரத்திற்கான மேல் முறையீட்டு ஆணையத்தின் இந்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க கோரியது. 17/02/2023 அன்று, உச்சநீதிமன்றம் தடை விதிக்க மறுத்தது. அதன் காரணமாகவே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ரூ.568 கோடி செலுத்தியது.

அந்த பணம் செலுத்த உச்ச நீதிமன்றம் தடை கிடைக்காத காரணத்தால் அந்த மின்சாரம் பெற்றதற்கான தொகை விடு விக்கப்பட்டது ஏதாவது திமுக மீது புகார் கூறவேண்டும் என்பதற்காக பூதக் கண்ணாடி போட்டு எதிர்க் கட்சிகள் பொய்யான அறிக்கைகளை வெளியிடுகின்றன. விமர்சனங்களை கண்டு திமுக ஒரு போதும் அஞ்சாது. அது பற்றி சிந்திப்பதும் கிடையாது. இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் மின்சார வினியோகம் செய்வது, அதாவது ரூ. 2.61என்ற குறைந்த விலையில் வழங்குவது தமிழ்நாடு அரசு மட்டும்தான்.

தரம் குறைந்த வார்த்தைகளில் என்னை குறித்து ஜாமீன் அமைச்சர் என்று ஒருவர் குறிப்பிட்டதை பற்றி கேட்கிறீர்கள் பாஜகவில் எத்தனை பேர் ஜாமீனில் வந்துள்ளனர். எத்தனைபேர் சிறைக்கு சென்று அமைச்சர்களாக உள்ளனர். என்று தெரியுமா?. அவர்கள் எல்லாம் ஜாமீன் அமைச்சர்களா?. ஒரு கருத்தை தெளிவாக சொல்வதற்கான பக்குவமும் இல்லை அறிவும் இல்லை.

லண்டனுக்கு படிக்கச் சென்றது 11 பேர். அதில் ஒருவரை மட்டும் பெரிது படுத்துகிறீர்கள். 11 நபர்கள் இந்த பயிற்சிக்காக சென்றார்கள். மூன்று ஐஏஎஸ் அதிகாரி, 3 ஐபிஎஸ் அதிகாரிகள் சென்றனர். ஒருவரை மட்டும் பெரிது படுத்துவது ஏன்? . இந்த படிப்பினால் ஏதோ பெரிய மாற்றம் வந்துவிட்டது போல செய்திகளை வெளியிடுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார்.

---

## இன்று திருமதி சோனியா காந்தி பிறந்த நாள்!



**அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாள் (9.12.2024) இன்று!**

---

# முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மூடுவதா?

## ஒன்றிய அரசுக்கு பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கண்டனம்!

திருவாரூர்,டிச.9- திருவாரூரில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட ரயில்வே மெயில் சர்வீஸ் எனப்படும் தபால்கள் பிரிக்கும் ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஒன்றிய பாஜக அரசு மூடுவதற்கு சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான பூண்டி. கே.கலைவாணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் இருந்து மயிலாடுதுறைக்கு மாற்றுவதாகக்கூறி 52ஆண்டுகளாக சொந்தக் கட்டிடத்தில் இயங்கிவருவதும் ,மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டதுமானஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் இரண்டாவது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மூடுவதற்கு முன்வந்திருக்கும் ஒன்றிய பாஜகஅரசுக்கு கண்டனம் தெரிவித்து திருவாரூர் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் எம்.பி. தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மாற்றுவதற்கு கண்டனம் தெரிவித்ததோடு, இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடமும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களிடமும் தகவல் தெரிவிக்கப்பட்டு ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை திருவாரூரிலேயே இயங்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என குறிப்பிட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஊராட்சிப்பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியப்பெருந்தலைவர் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர மன்றத்தலைவர்கள் புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா, ஒன்றியச்செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், ஐ.வி.குமரேசன், தெட்சிணாமூர்த்தி, கவியரசு, நகர செயலாளர்கள் வாரை. எஸ்.பிரகாஷ்,எஸ்.வி. பக்கிரிசாமி, பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், வர்த்தகர் சங்கத்தலைவர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

முடிவில் சி.பி.ஐ. நிர்வாகி மாசிலாமணி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், வர்த்தகர் சங்கம் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட சங்கங்களின் நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



கரூர் , கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கரூர் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களிடம் கோரிக்கை மனு பெறும் நிகழ்ச்சி நடைபெற்றது. கோடங்கிபட்டி பட்டாளம்மன் கோவில் அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி .செந்தில் பாலாஜி கோரிக்கை மனுக்களை பெற்றார். அருகில் கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் குளித்தலை ஆர்.மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, ஆர். இளங்கோ, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர் எஸ்பி .கனகராஜ், மாநகராட்சி ஆணையர் சுதா உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் மாணவர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி புதூர் அல் அமீன் எல்.பி. என். பள்ளிகளில் துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவியருக்கு நலத்திட்ட உதவிகளை மாணவரணி அமைப்பாளர் துரை கோபால்சாமி என்ற அன்பு வழங்கிய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன் ஆறுமுகம் வி. சி.மாதவன் பி.எம். மருது, ஆர் ஆர் மகேந்திரன், ஆழ்வார், சவரி ராயன் அந்தோணியம்மாள் ராஜேஷ் சந்துரு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் கலந்துரையாடல் கூட்டத்தில் சிறுபான்மையினருக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ. அருண் சே,ச வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன்,துணைத் தலைவர் எம்.எம்.அப்துல் குத்தூஸ் என்ற இறையன்பன் குத்தூஸ்,கிறிஸ்தவ தேவாலய ங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜிலா சத்யானந்த், உள்பட பலர் உள்ளனர்.